# அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி–2

**வேலைவாய்ப்பு அறிவிப்பு நாள்.30/10/2017**

இத்திருக்கோயிலில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் 01/12/2017 மாலை 5–00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் கிடைக்குமாறு தபால் மூலம் மட்டுமே வழங்கப்பட வேண்டும். விண்ணப்ப உறையின் மேல்பகுதியில் "**எந்த பணிக்கு**" என்ற விவரத்தை எழுதி உதவிஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில் மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் வட்டம் என்ற முகவரியிட்டு அனுப்பப்படவேண்டும்.

| திருக்கோயில் பெயர் | பதவியின் பெயர் | ஊதிய விகிதம்ரூ. | காலி பணியிடம் எண்ணிக்கை | குறைந்தபட்ச தகுதிகள் |
|---|---|---|---|---|
| அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில், மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி | ஓதுவார் | **5200–15900 தரஊதியம் 2000** | **1 (ஒன்று)** | **8–ம் வகுப்பு தேர்ச்சி, வயது வரம்பு 18க்கு மேல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.தேவாரம் பாடத்திற்கான தமிழக அரசால் அங்கீகரிக்கப்ட்ட தேவார பயிற்சி பள்ளியில் அல்லது தனியார் தேவார பயிற்சி பள்ளியில் 5 ஆண்டுகள் படிப்பில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.** |
| | மின் பணியாளர் | **4100–12300 தரஊதியம் 1900** | **1(ஒன்று)** | வயது வரம்பு 18க்கு மேல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.தமிழ்நாடு தொழில்நுட்ப வாரியத்தில் 3 ஆண்டுக்கான D.EEE சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வழங்கப்பட்ட 'C' சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். மின் பணியாளராக 3 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| | காவலர் | **4100–10000 தரஊதியம் 1400** | **4(நான்கு)** | **8–ம் வகுப்பு தேர்ச்சி, வயது வரம்பு 18க்கு மேல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.** |
| | சமையல் பணியாளர் (பரிச்சாரகர்) | **4100–10000 தரஊதியம் 1400** | **1(ஒன்று)** | **8–ம் வகுப்பு தேர்ச்சி, வயது வரம்பு 18க்கு மேல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும். திருக்கோயிலில் பழக்க வழக்கப்படி நைவேத்தியம் மற்றும் பிரசாதங்கள் தயாரிக்கக்கூடிய தகுதி, 2 ஆண்டுகள் முன் அனுபவம் பிராமண வகுப்பினர் மட்டுமேவிண்ணப்பிக்க வேண்டும்.** |
| | மசால்ஜி | **4100–10000 தரஊதியம் 1400** | **1(ஒன்று)** | **8–ம் வகுப்பு தேர்ச்சி, வயது வரம்பு 18க்கு மேல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.மசால்ஜி பணிக்கான முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.** |

## தேவையான தகுதிகள்

1. விண்ணப்பதாரர் இந்துமதத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். அவரது சாதி சான்றிதழில் உண்மை நகலில் அரசு அலுவலரால் ஒப்பமிட்டு இணைக்கப்படவேண்டும்.
2. அனைத்து பணியிடங்களுக்கும் விண்ணப்பதாரர்கள் 01/07/2017ம் தேதி அன்று 18 வயது பூர்த்தி ஆனவராகவும், 45 வயதுக்குட்பட்டும் இருக்க வேண்டும்.
3. தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்கவேண்டும்.
4. ஒழுங்கீனம் குற்றத்திற்காக நீதிமன்றத் தண்டனை பெற்றவர்கள், நீதிமன்றத்தால் கடனைத் தீர்க்க இயலாதவர் என தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் அல்லது அதற்காக மனு செய்துள்ளவர்கள் வேறு திருக்கோயில்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு பணிகளிலிருந்து அவற்றிற்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், திருக்கோயில் நலன் மற்றும் நிர்வாகத்திற்கு எதிராக செயல்பட்டவர் என்பதற்காக திருக்கோயில் மூலம் வழக்குத் தொடரப்பட்டவர்கள் மற்றும் மேற்படியார்களது வாரிசுதாரர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர். இது போன்ற காரணங்கள் பின்னர் எந்த நிலையில், எப்போது கண்டறியப்பட்டாலும், சம்பந்தப்பட்ட பணியாளரை பணி நீக்கம் செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
5. விண்ணப்பதாரர்கள் அவர்கள் கடைசியாகப் பயின்ற கல்வி நிலையத்திலிருந்து பெற்ற நன்னடத்தைச் சான்றிதழ் நகல் மற்றும் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒருவரிடமிருந்து இந்த விளம்பர தேதிக்கு பின் பெற்ற நன்னடத்தைச் சான்றிதழ் நகல் மற்றும் முன் அனுபவ சான்றிதழ் நகல் ஆகிய மூன்று சான்றிதழ்களையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அசல் சான்றிதழ் கண்டிப்பாக இணைக்க கூடாது
6. விண்ணப்பத்தாரர்களின் உறவினர்கள் எவரேனும் இத்திருக்கோயிலிலோ, அறநிலையத்துறைக்கு உட்பட்ட வேறு எந்த திருக்கோயிலிலாவதோ, அல்லது அறநிலையத்துறை அலுவலகங்களிலாவதோ பணியில் உள்ளனரா என்ற விவரம் தரப்பட வேண்டும்.
7. அறிவிப்பில் குறிப்பிட்ட மாதிரி படிவத்தில் கைப்பட எழுதியோ அல்லது தட்டச்சு செய்தோ சொந்த செலவில் அனுப்பிவைக்கவேண்டும். திருக்கோயில் நிர்வாகம் தேவையென கருதும் விவரங்களை விண்ணப்பதாரர் அளிக்க கடமைப்பட்டவராவார்.
8. விண்ணப்பப் படிவத்தின்படி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அஞ்சல் மூலம் வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். காலங்கடந்து வரும் விண்ணப்பங்களும், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத கையொப்பமிடாத, விண்ணப்பங்களும் எவ்வித பரிசீலனைக்கும் எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும். அது தொடர்பாக பின்னிட்டு எழும் எவ்வித கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. கல்வித்தகுதி மற்றும் விண்ணப்பத்திற்கான சான்றுகள் அனைத்து ஒளி நகல்களும் (சிராக்ஸ்) தகுதி வாய்ந்த அரசு பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிட்டு இணைத்து அனுப்பவேண்டும். அசல் சான்றுகள் கண்டிப்பாக இணைக்க கூடாது.
10. விண்ணப்பங்கள் அனைத்தும் சாதாரண தபாலில் அனுப்பப்படவேண்டும். நேரில் அல்லது வேறு முறைகளில் அளிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
11. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சான்று நகல்கள் இணைத்து உறையின்மேல் பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடவேண்டும்.
12. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசி நாள்.01/12/2017 மாலை 5–00 வரை பெறப்படும். மேலே குறிப்பிட்ட தேதிக்குப்பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு இவ்வறிவிப்பு நாளாகிய 30/10/2017–க்கு முன்னர் வரப்பெற்ற விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
13. மேற்படி விண்ணப்பங்கள் "**<u>உதவி ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில், மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி–620002</u>**" என்ற முகவரியிட்டு அனுப்பப்படவேண்டும்.
14. தகுதியுள்ள நபரை தேர்வு செய்வதில் திருக்கோயில் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.
15. தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் நாள் குறித்தான விவரம் பின்னர் தபால் மூலம் தெரிவிக்கப்படும். அது சமயம் தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்கள் நேர்காணல் நடைபெறும் நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக உண்மைச் சான்றிதழ்களுடன் நேரில் ஆஜராக வேண்டும். நேர்காணல் நடைபெறும் தேதி நிர்வாகக் காரணங்களுக்காக மாறுதலுக்குட்பட்டது ஆகும்.
16. தேர்வு செய்யப்படும் நபரை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்கு பின்னரே பணி நியமனம் செய்யப்படும்.
17. நல்ல ஆரோக்கியமான உடல் நலம் பெற்றிருத்தல் வேண்டும். அதற்கான மருத்துவர் சான்றும் பெற்றிருக்க வேண்டும்.
18. தொற்று நோய், உடல் அல்லது மனநிலை பற்றிய குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதி அற்றவர்கள் ஆவார்.
19. குறிப்பிட்ட தேதிக்குள் உரிய படிவத்தில் தேவையான இணைப்புகள் சான்றுகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்கள் தகுதியற்றவை என நிராகரிக்கப்படும்
20. நேரடித்தேர்வுக்கு அழைக்கப்படுபவர்கள் அவர்களுடைய சொந்த செலவிலேயே வரவேண்டும். திருக்கோயில் நிர்வாகம் போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் ஏற்காது.

21. வரும் விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு, தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அறிவிப்பு அனுப்பப்படும்

22. விண்ணப்பதாரர்கள் மது அருந்தும் பழக்கம் உடையவர்களாக இருத்தல் கூடாது.

23. விண்ணப்பம் செய்தாலோ அல்லது அந்தவொரு விண்ணப்பத்தால் தேர்வு செய்யப்பட்டதாக கருதக்கூடாது.

24. தகுதியின்மை கொண்டு விண்ணப்பங்கள் காரணம் கூறாது நிராகரிக்கப்படும்.

25. **இணைக்கப்படவேண்டிய சான்றுகளின் சான்றிடப்பட்ட நகல்கள்:–**

    1. வயது
    2. கல்வித்குதி
    3. சாதிசான்றிதழ்
    4. விண்ணப்பிக்கும் பதவிக்கான சிறப்பு தகுதி சான்றிதழ்
    5. முன்அனுபவ சான்றிதழ்
    6. நன்னடத்தை சான்றிதழ்

    தேர்ந்ததெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள், பணி நியமன ஆணை வழங்கப்பட்டதும், பணியில் சேரும் முன் உடற் தகுதிச் சான்று அரசு பதிவு பெற்ற மருத்துவரிடம் பெற்று சமர்ப்பிக்கப்படவேண்டும்.

26. விண்ணப்பங்களை http://trichyrockfort.tnhrce.in இணைதள முகவரில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்

27. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

# அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்
மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி–2

## வேலைவாய்ப்பு விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் (பெரிய எழுத்துகளில்) :
2. தந்தை/பாதுகாவலர் பெயர் :
3. முழு முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) :
4. வயது மற்றும் பிறந்த தேதி :
5. இனம் மற்றும் மதம் :
6. விண்ணப்பம் செய்யும் பணியின் பெயர்
7. கல்வித் தகுதி :
8. முன் அனுபவம் :
9. சிறப்புத் தகுதிகள் :
10. நன்னடத்தைச் சான்று இரண்டு

    (அ) கடைசியாக கல்வி பயின்ற இடத்தில் பெற்றது.*

    (ஆ) அரசிதழ் பதிவு பெற்று அலுவலர்களிடமிருந்து பெற்றது. *
11. மனுதாரரின் உறவினர்கள் எவரேனும் திருக்கோயில் பணியில் உள்ளனரா என்று விவரம்
12. பொது விவரங்கள்

## உறுதிமொழிகள்

மேலே தெவிக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும், சரியானது என்றும் உறுதி கூறுகிறேன். நான் விண்ணப்பித்துள்ள பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டால் இந்துசமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்கும், துறை அதிகாரிகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்.
இடம்

(குறியீடு உள்ள இனங்களுக்கு சான்றிதழ்கள் இணைக்கப்படவேண்டும்)